

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைமை அலுவலகத்தில் நேற்று (08.10.2024) மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி தலைமையில் சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் பகிர்மான மண்டலங்களில் வட கிழக்கு பருவ மழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே.நந்தகுமார், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மகாஜன் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### பருவமழை : மின்கம்பிகள் அறுந்துவிழுவதை தடுத்திட

# போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## சென்னை, காஞ்சி மண்டல ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வலியுறுத்தல்!

சென்னை, அக்.9-

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் பகிர்மான மண்டலங்களில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு நடைபெற்றது.

நேற்று (08.10.2024), தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி தலைமையில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் பகிர்மான மண்டலங்களில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், இயக்குநர்/பகிர்மானம் (மு.கூ.பொ) திருமதி. கு.இந்திராணி, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டல தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் சென்னை மண்டல 15 பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers) கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாடு முழுவதும் ஒருங்கிணைந்த சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 01.4.2024 முதல் 30.09.2024 வரை மொத்தமாக 15,93,893 சிறப்பு பராமரிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதிலும், குறிப்பாக, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் மண்டலங்களில் 5,983 மின்கம்பங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன, சாய்ந்த நிலையில் இருந்த 3,193 மின் கம்பங்கள் சரி செய்யப்பட்டிருக்கின்றன, புதியதாக 2,604 மின் கம்பங்கள் இடைசெருகல் செய்யப்பட்டிருக்கின்றன, 12,034 இடங்களில் பலவீனமான இன்சுலேட்டர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன, 3,314 இடங்களில் மின்கம்ப தாங்கு கம்பிகள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன, பழுதடைந்த 2,040 பில்லர் பாக்ஸ்கள் சரிசெய்யப்பட்டுள்ளன, இதுதவிர்த்து சுமார் 534 கி.மீ. பழைய மின் கம்பிகள் புதியதாக மாற்றப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 1,14,454 சிறப்பு பராமரிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 05.10.2024 அன்று, துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில், எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சென்னை மண்டல 15 பொறுப்பு அலுவலர்களிடம் (Nodal Officers) விரிவான ஆய்வினை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டார்.

மேலும், வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்காக சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் மண்டலங்களில் 392 மின்மாற்றிகள், 4,444 மின் கம்பங்கள் மற்றும் 2,484 கி.மீ. மின்கடத்திகள் உட்பட அனைத்து தளவாட பொருட்களின் கையிருப்பு நிலை குறித்து அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டல தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் சென்னை மண்டல 15 பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers) அனைவருக்கும் கீழ்க்கண்ட அறிவுறுத்தல்கள் அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மழை நீர் தேங்கும் பகுதிகளில், அடையாளம் காணப்பட்ட அனைத்து தாழ்வு நிலையிலான பில்லர் பாக்ஸ்கள் (Pillar Box) தரை மட்டத்திற்கு மேல் ஒரு மீட்டர் உயரத்தில் நிறுவும் பணிகள் உடனடியாக முடிக்கப்பட வேண்டும். இதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் சென்னை மற்றும் காஞ்சிபுர மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் மேற்கொண்டு பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவதை உறுதி செய்ய வேண்டும்.

பில்லர் பாக்ஸ்கள் அனைத்தும் உரிய முறையில் பராமரிக்கப்படுவதை அந்தப் பகுதியை சார்ந்த செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் கள ஆய்வு மேற்கொண்டு உறுதி செய்ய வேண்டும்.

ஆர்.கே.நகர் பகுதியில் அடையாளம் காணப்பட்ட வெளியில் தெரியும் மின் கேபிள்கள் உடனடியாக புதைக்கப்பட வேண்டும்.

அம்பத்தூர் பகுதியில் தாழ்வான நிலையில் செல்லும் மின் கடத்திகளை உடனடியாக உயர்த்தப்பட வேண்டும்.

தேனாம்பேட்டை பகுதியில் அடையாளம் காணப்பட்ட தாழ்வு நிலையிலான பில்லர் பாக்ஸ்கள் உடனடியாக உயர்த்தப்பட வேண்டும்.

மயிலாப்பூர் பகுதிகளில், குடி நீர் வடிகால் பணிகளின் போது சேதமடைந்த மின் கேபிள்கள் உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

மரம் வெட்டும் உபகரணங்கள், பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் இயங்கும் நிலையில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் மற்றும் தேவைப்படும் அனைத்து தளவாடப் பொருட்களையும் இருப்பில் வைத்துக் கொள்வதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஜே.சி.பி., கிரேன்கள் உள்ளிட்ட வாகன உரிமையாளர்களின் தொலைபேசி எண்களை முன்னமே கேட்டறிந்து அவைகளின் தயார் நிலை உறுதி செய்யப்பட வேண்டும்.

மின் தடங்கல் ஏற்படின் முதற்கட்டமாக மருத்துவமனைகள், குடிநீர் இணைப்புகள், அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் செல்போன் டவர்கள் அனைத்திற்கும் முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.

வாரிய வாகனங்கள் அனைத்தும் செப்பனிடப்பட்டு எரிபொருள் நிரப்பப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும்.

காற்றுடன் கூடிய மழையின் போது மிகத் தாழ்வான நிலையில் செல்லும் மேல்நிலை மின் கம்பிகள் அறுந்து விழுவதை தடுக்க உரிய நடவடிக்கையினை போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும்.

இது போன்ற மழைக் காலங்களில் உயர் அலுவலர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினருடனும், தீயணைப்பு துறையினருடனும் எப்பொழுதும் தொடர்பில் இருக்க வேண்டும்.

பேரிடர் காலங்களில் பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் தங்குவதற்கு உரிய பள்ளிகள், திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள் அடையாளம் காணப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும்.

அனைத்து அலுவலர்களும் தமது அலைபேசியை எந்தக் காரணம் கொண்டும் OFF செய்து வைக்கக்கூடாது எனவும், இதனை மீறுபவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் எச்சரித்தார்.

மேலும், மழைக் காலங்களில் தகவல் தொடர்பில் தொய்வு ஏற்படாமல், மின்சார பணிகள் தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்ள வாக்கி டாக்கி இயந்திரங்களை உடனடியாக கொள்முதல் செய்ய உத்தரவிட்டார்.

கடந்த 01.04.2024 முதல் 30.09.2024 வரை சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டலங்களில் ஏற்பட்ட மின்தடங்கல் பற்றியும் விரிவான ஆய்வினை மேற்கொண்டு, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனுக்குடன் சரி செய்யுமாறும், பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மின் சேவைகள் மற்றும் தடை குறித்த புகார்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் மின்னகத்தை 94987 94987 தொடர்பு கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பரங்குன்றம் ஆர்.கோபால்சாமி
### அக்டோபர் 9 (1992)



திருப்பரங்குன்றம் கிளைக் கழகச் செயலாளராகவும், 1965இல் திருப்பரங்குன்றம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும், 1980 முதல் 1992 வரை ஒன்றுபட்ட மதுரை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1962இல் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தி.மு.க. 3வது மாநில மாநாட்டில் சிறப்பாகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், ஆகிய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

அவசரநிலையின் போது மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சென்னை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்!

### மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு



சென்னை வடக்கு மாவட்டகழக செயற்குழு கூட்டம் 10-10-2024 அன்று வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர். வெற்றிவீரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா. மூர்த்தி, ஜெ.ஜெ.எபினேசர் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு,பொதுக்குழுஉறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள்,அனைத்துஅணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** 1.கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா

2. அக்டோபர் 29ல் வெளியாகும் வாக்காளர்கள் பட்டியல்சரிபார்த்தல்

3.இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்த்தல்

4.கழக ஆக்க பணிகள்

**ஆர்.டி.சேகர்** எம்.எல்.ஏ.
செயலாளர், - சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆரணி கோ. வெற்றிவீரன்
### அக்டோபர் 9 (2019)



1954ல் ஆரணி பேரூர்க் கழகம் துவங்கப்பட்டபோது, கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்ற துவங்கினார்.

மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் என பொறுப்புகள் வகித்தவர்.

'நம்நாடு' இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியதோடு, முரசொலியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியவர்.

கருப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் எரிப்பு, இந்தி திணிப்பு எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என தலைமை அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

நீலகிரி மாவட்டம், கூடலூர் நகரத்தைச் சேர்ந்த மாவட்ட பிரதிநிதி மு.மணிகண்டன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் விமலநாதன் மற்றும் பி. ராயின் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 08.10.2024.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

தஞ்சை மத்திய மாவட்டம், ஒரத்தநாடு தெற்கு ஒன்றியம், ஆம்லாப்பட்டு வடக்கு, கண்டியர் தெரு கிளையைச் சேர்ந்த முன்னாள் மாவட்ட பிரதிநிதியும், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி முன்னாள் அமைப்பாளருமான நேதாஜி அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 08.10.2024.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கபடா ராஜி (கே. ராஜி)
### அக்டோபர் 9 (2008)



திராவிடர் கழகத்தில் தந்தை பெரியாரின் சிறந்த தொண்டராக விளங்கியதால், 'கருப்புச்சட்டை வீரர்' என்று கழகத்தினரால் அன்பாக அழைக்கப்பட்டவர். தி.மு.க. துவக்கப்பட்டபோது, இராயபுரம் பகுதி 6வது வட்ட அவைத்தலைவராகவும், மாவட்டக் கழக பிரதிநிதியாகவும் இருந்தவர்.

1963ஆம் ஆண்டு மீனவர்கள் கடலில் திசைமாறி காணாமல் போனபோது, ராணா என்ற நேவி கப்பலில் சென்று தேடி கண்டுபிடிக்க உதவியாக இருந்தவர்.

பழவேற்காடு முதல் மாமல்லபுரம் வரை மீனவர்களுக்கு கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி, மீனவர் பெடரேசன் தலைவராகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். அவசரநிலையின் போது மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

'ராஜி' என்று அன்பொழுக தலைவர் கலைஞர் அவர்களால் அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**